**சுற்றுநிருப இலக்கம்:** 05/2007

எனது இலக்கம்: எம் 1/4 (13) வி.உ.ம.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 280, மெயின் வீதி,
கொழும்பு 11.

2007.10.03

அனைத்து மாவட்ட செயலாளர்கள் / மேலதிக பதிவாளர் நாயகங்கள்,
அனைத்து பிரதேச செயலாளர்கள் / மாவட்டப் பதிவாளர்கள்,
அனைத்து காணிப் பதிவாளர்கள் மற்றும்
மேலதிக மாவட்டப் பதிவாளர்கள்.

**விவாகம், பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர் பதவிகளுக்காகப் பதில் கடமையாற்ற நியமித்தல் மற்றும் மேலதிக விவாகப் பதிவாளர் பதவிகளை உருவாக்குதல்.**

---

தற்போது விவாகம், பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்களின் பதில் கடமைக்காக பல்வேறு காரணங்களின் அடிப்படையில் புதிய பதில் கடமைப் பதிவாளர்களை நியமிப்பதனால், அவர்களை நிரந்தரமாக்கும்போது திணைக்களம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதுடன், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. எனவே, அத்தகைய நிலைமைகளைத் தவிர்த்துக்கொள்வதற்காக பின்வருமாறு தாமதமின்றிச் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன்:

1. ஏதேனும் ஒரு பிரிவில் (திடீர் மரணம், ஒழுக்காற்று காரணங்கள் அல்லது இராஜினாமா போன்ற காரணங்களால்) விவாகம், பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர் பதவியொன்று வெற்றிடமாகும் போது, அதற்குப் பதில் கடமையாற்ற புதியவர்களை நியமிப்பதை இயலுமானவரைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

   , "**அயல் பிரிவின் பதிவாளரை 30 நாட்களுக்கு மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் நியமியுங்கள்.** அத்துடன், மீண்டும் அறிவிக்கும் வரை பதில் கடமையாற்றுவதற்காக 'பி 77' படிவத்தினூடாக பரிந்துரைகளையும், வெற்றிடத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கான பரிந்துரைகளையும் உடனடியாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுங்கள்."

2. ஏதேனும் ஒரு பதிவாளர் ஓய்வுபெறுவதற்கான திகதி தீர்மானிக்கப்பட்டிருப்பின் (75 வயது அல்லது 2006.08.30 இற்குப் பின்னர் நியமனம் பெற்றவர்கள் எனின் 70 வயது), அதற்கு 06 மாதங்களுக்கு முன்னர் அது குறித்து எனக்கு உடனடியாகத் தெரியப்படுத்துங்கள். அதற்காக பதிவாளர்களின் ஆவணக்கோப்புகளை இற்றைப்படுத்தி வைத்திருக்குமாறு ஒவ்வொரு

விடயத்திற்குப் பொறுப்பான முகாமைத்துவ உதவியாளருக்கும் அறிவுறுத்தல் வழங்குங்கள். அவை முறையாக நடைபெறுகின்றனவா என்பதை மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது பரிசோதியுங்கள். பதிவாளர் ஒருவர் ஓய்வுபெறும் போது, பதில் கடமையாளரின் சேவை அவசியமற்ற வகையில் புதிய நியமனங்களை மேற்கொள்வதே இதன் நோக்கமாகும்.

3. பதில் கடமை மேலதிக விவாகப் பதிவாளர் பதவிகளை உருவாக்குவதற்குப் பரிந்துரைக்கும்போது மிகவும் அவதானமாகவும், மிக அத்தியாவசியமான காரணங்கள் இருந்தால் மாத்திரமும் பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அளவுக்கு அதிகமாக மேலதிக விவாகப் பதிவாளர்களை நியமிப்பதனால், எதிர்காலத்தில் விவாகப் பதிவாளர்களால் வழங்கப்பட்ட விவாகச் சான்றிதழ்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் எதிர்நோக்கக்கூடிய சிரமங்களைத் தவிர்ப்பதே இதன் நோக்கமாகும்.

**இச்சுற்றுநிருபம் கிடைக்கப்பெற்றமையை எனக்குத் தயவுசெய்து உறுதிப்படுத்துங்கள்.**

**(ஒப்பம்)**

எஸ். எம். குணசேகர

**பதிவாளர் நாயகம்**

**பிரதிகள்:**

1. செயலாளர், பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.
2. தலைமை அலுவலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்கள் - தகவலுக்காக.
3. அனைத்து வலயங்களுக்குப் பொறுப்பான உதவிப் பதிவாளர் நாயகங்கள் - தகவலுக்காக.
4. பிரதிப் பணிப்பாளர் (புள்ளிவிபரம்).